# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. போர், கொடை, வீரம் என்பன பற்றிக் கூறுவது

அ) அகம் ஆ) புறம் இ) மறம் ஈ) அறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. பின்வருவனவற்றுள் உயிர் எழுத்துகள்

அ) அ, ஆ, இ ஆ) க், சு, ச்
இ) க், ங், ச் ஈ) க, ல், ஒ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நாட்டிய அரங்கமாகத் தோன்றும் மருதநிலத்தில் முழவுகளாக முழங்குபவை

அ) வண்டுகள் ஆ) முகில்கள் இ) குயில்கள் ஈ) மயில்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கணை என்ற சொல் குறிப்பது

அ) வேலை ஆ) வாளை இ) வில்லை ஈ) அம்பை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நாவலந்தீவு முழுவதும் தன் மேலாண்மையை நிலை நிறுத்திய சேர அரசன்

அ) நெடுஞ்செழியன் ஆ) இராசராச சோழன்
இ) குலோத்துங்கன் ஈ) நெடுஞ்சேரலாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. நடனக்குலப் பெண்களை________________ என அழைப்பர்.

அ) பாடினி ஆ) விறலியர் இ) கூத்தர் ஈ) பாணர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கவிஞர் காசிஆனந்தன் பிறந்த ஊர்

அ) திருகோணமலை ஆ) மன்னார்
இ) மட்டக்களப்பு ஈ) புத்தளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் தொடர்மொழி

அ) காற்று ஆ) தங்கை இ) இராப்பகல் ஈ) தாமரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகளின் பெயர்கள்

அ) காவேரி, குமரி ஆ) வைகை, பஃறுளி

இ) கங்கை, யமுனை ஈ) பஃறுளி, குமரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. இந்தியா முழுவதும் தமிழ்நாடாக இருந்தபொழுது அதன் பெயர்

அ) இலங்கை ஆ) தமிழ்நாடு இ) நாவலந்தீவு ஈ) குறுநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. குறள் :- பெருக்கத்து வேண்டும் ____________ சிறிய

சுருக்கத்து வேண்டு முயர்வு

அ) குனிதல் ஆ) பணிதல் இ) அணிதல் ஈ) எழுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நனிகுளிர் நின்ற பனிகாலம். இதில் வந்துள்ள உரிச்சொல்

அ) நனி ஆ) குளிர் இ) நின்ற ஈ) பனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த நூற்றாண்டு

அ) 15ஆம் நூற்றாண்டு ஆ) 16ஆம் நுற்றாண்டு

இ) 13ஆம் நூற்றாண்டு ஈ) 14ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ''நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என்று கூறியவர்

அ) தருமி ஆ) அரசன் இ) நக்கீரர் ஈ) இறைவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பொற்றாமரை என்ற சொல்லைப் பிரித்தால்

அ) பொற் + தாமரை ஆ) பொற்றா + தாமரை

இ) பொன் + தாமரை ஈ) பொற்த் + தாமரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. வில்லுப்பாட்டுக் குழுவில் இடம்பெறுவோர்

அ) இருவர் ஆ) எழுவர் இ) எண்மர் ஈ) பதின்மர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. **பழமொழி :-** பதறாத காரியம் சிதறாது என்ற பழமொழி விளக்குவது

அ) அமைதியின் வெற்றி
ஆ) அறிவின் அடக்கம்
இ) உளநிறைவு
ஈ) வீண்பெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நாளைக்குச் சாப்பிட்டேன். இதில் இடம் பெற்றுள்ள வழு

அ) திணைவழு ஆ) பால்வழு இ) காலவழு ஈ) வினாவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பொன்னன் என்பது

அ) குறிப்புவினை
ஆ) தெரிநிலைவினை
இ) குறைவினை
ஈ) எச்சவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஓர் எழுவாயின் செயல் முற்றுப் பெற்று நிற்கும் சொல்

அ) வினையடி
ஆ) வினைமுற்று
இ) வினையெச்சம்
ஈ) பெயரெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'பூவார் சோலை மயிலால' என்று தொடங்கும் பாடலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள்
ஆ) புகழேந்தி
இ) கம்பர்
ஈ) முடியரசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் (வாக்கியங்கள்) தொடரும் இடங்களில் வரும் குறியீடு

அ) அரைப்புள்ளி
ஆ) காற்புள்ளி
இ) முற்றுப்புள்ளி
ஈ) முக்காற்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. "இளையோர் சூடார் வளையோர் கொய்யார்" என்ற பாடல் இடம் பெற்ற நூல்

அ) அகநானூறு
ஆ) குறுந்தொகை
இ) புறநானூறு
ஈ) பரிபாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பின்வருவனவற்றுள் இடுகுறிப்பெயர்

அ) பறவை ஆ) முள்ளி இ) வாள் ஈ) வானொலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வருகின்ற என்பது

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) வினைமுற்று ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. நானிலத்தின் மண்ணியல்பையும் காலநிலையையும் குறிப்பது

அ) கருப்பொருள் ஆ) உரிப்பொருள்
இ) முதற்பொருள் ஈ) பருப்பொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை

அ) படி ஆ) எழுது இ) ஓடு ஈ) வெட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலைவடிக்கக் கல்லெடுக்கச் சென்ற இடம்

அ) பொதிகை ஆ) இமயம் இ) வேங்கடம் ஈ) குமரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. காலை மாலை என்பது

அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

அ) 20 ஆ) 30 இ) 247 ஈ) 100

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. மலைவளம் காணச் சென்ற மன்னன் யார்?

2. கழக இலக்கியங்களில் அகம், புறம் எனச் சுட்டப்படுபவை எவை?

3. குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாக இன்றுள்ள தமிழ் நாடுகள் யாவை?

4. **குறள் :** மயிர்நீர்ப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்
இக் குறளின் பொருளைத் தருக.

5. இலங்கையை ஆண்ட ஐரோப்பியர் மூவரும் யார்?

6. சிந்துநதி நாகரிகத்தில் இருந்த நகரங்கள் எவை?

7. தேவநேயப்பாவாணர் எழுதிய இரு ஆய்வு நூல்களும் எவை?

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டில் இலங்கைத் தீவு ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டது. அன்று முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழரின் அடிப்படை உரிமைகளான கல்வி உரிமை, மொழியுரிமை, வாழிட உரிமை போன்ற உரிமைகளைப் போட்டிபோட்டுப் பறித்தெடுத்தனர். அது மட்டுமன்றித் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதைத் தடுத்தனர். அதையும் மீறிக் கல்வி கற்ற மாணவர்களின் உயிர் மூச்சை நிறுத்துவது போல் யாழ் நூலகத்தை எரித்துச் சாம்பல் மேடாக்கினர்.

எத்தனை தடைகள் வந்தாலும் தலைவன் காட்டிய வழியில் தடம்புரளாது வாழ்ந்த தமிழினம் கல்வியில் முதலிடம், பண்பாட்டில் முதலிடம் படைப்பாற்றலில் முதலிடம் என்று கிள்ளக் கிள்ள வளரும் தேயிலைச்செடி போல் தழைத்தோங்கியது. இதைக் கண்டு பொறுக்க முடியாத சிங்கள அரசு அடியோடு தமிழினத்தை அழிக்கத் திட்டம் தீட்டியது. வல்லரசுகளுடன் கூட்டுச் சேர்ந்தது. இரவோடு இரவாகக் கொத்தணிக் குண்டுகளைப் போட்டு எம்மினத்தைத் அழித்து முடித்தது.

1. கிள்ளக்கிள்ள வளருவது எது?

_______________________________________________

_______________________________________________

2. எத்தனையாம் ஆண்டு இலங்கைத்தீவு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்டது?

_______________________________________________

_______________________________________________

3. எதன் மூலம் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதைத் தடுத்தனர்?

_______________________________________________

_______________________________________________

4. தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் இரண்டைத் தருக?

______________________________________________________________

______________________________________________________________

5. யார் காட்டிய வழியில் தமிழினம் தடம் புரளாது வாழ்ந்து வந்தது?

______________________________________________________________

______________________________________________________________

**புள்ளிகள் 10**

**தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## கடல் அம்மா

| | | | | |
|---|---|---|---|---|
| ீன்களையும் | உயிர்கள் | மறந்து | கையால் | செல்ல |

வெண் மணற் பரப்பினிலே
வெள்ளை நுரை அலைக் ____________________
கோலமிடும் கடல் அம்மா - நீடு
காலம் நீ வாழி!
உந்தன் மடியினிலே எத்தனை ____________________
உறங்கி மகிழுதம்மா
உண்பதற்கு ____________________ - எமக்கு
உணவாகத் தருகின்றாய்
உன்மேலே பெரிய கப்பலையும்
ஊர்ந்து ____________________ விடுகின்றாய்
இத்தனையும் செய்கின்றாய் - எங்களுக்கு
இனிய மழையாயும் வருகின்றாய்
அத்தனையும் ____________________ - நீ
ஆழிப்பேரலையாக மாறுவது ஏனம்மா

## இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

பின்வரும் செய்வினைச் சொல்லியத்தைச் செயப்பாட்டுச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

சேயோன் சிற்பம் செதுக்கினான்.

______________________________________________

கருத்தடிப்படையில் சொல்லியங்கள் (வாக்கியங்கள்) எத்தனை வகைப்படும்? செப்புச் சொல்லியம் (வாக்கியம்) வியப்புச் சொல்லியம் இரண்டிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

______________________________________________

பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அ) பெயரெச்சம் ______________________________

ஆ) வினையெச்சம் ______________________________

இ) வினைமுற்று ______________________________

பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கரை ______________________________________

______________________________________

கறை ______________________________________

______________________________________

பின்வரும் அணிகளுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

உவமை அணி ______________________________

உருவக அணி ______________________________

**பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

I den gamle tid erobrede en tamilsk konge, Ravanan, Sri Lanka. Ravanan er en stor kriger. Han var en god konge. Han havde dygtighed i musik og dans. Ravanans flag er et flag med « veenai ». Han viste en moders venlighed overfor alle folk. Da han var venlig overfor alle, tilbad alle ham som en Gud. Derfor blev han kaldt « Eesan ». « Eesan » betyder Gud.

In the olden days Thamil king Iravanan ruled Srilanka. He was a big hero. Iravanan was a good king. He was well accomplished in music and dance. Iravanan's flag was a veena flag. Iravanan showed his love to all the people like a mother. Because he was good to everyone they gave him praise as god. So he was called Eesan. The meaning of Eesan is god.

Autrefois, Ravanan, un roi Tamoul a dirigé le Ceylan. C'était un grand guerrier et roi digne de son nom. Il était doué dans la musique et la danse. Son drapeau était un veena, il prenait soin de son peuple comme si c'était sa propre mère. Le peuple le considérait comme un dieu parce qu'il était généreux avec tout le monde et ils l'ont donc nommé « issan » ce qui signifie dieu.

Vor langer Zeit herrschte ein tamilischer König namens Raavanan über Sri Lanka. Raavanan war ein starker Held. Er war ein guter König. Im Gesang und Tanz war er ein talentierter Mann. Die Fahne von Raavanan ist die Veenai-Fahne. Er war zu allen Menschen sehr liebevoll, wie eine Mutter. Da er für alle ein guter Mann war, nannten ihn alle Gott. Deshalb wurde er „Eesan" genannt. „Eesan" bedeutet Gott.

Ravanan is de Tamil keizer die eeuwen geleden Ilangai heeft bestuurd. Ravanan is een grote held. Hij was een goede keizer en was goed in muziek en dansen. De vlag van Ravanan is een Veenai. Hij gaf moederliefde aan het volk. Doordat hij goed was voor iedereen, zagen ze hem als een god. Daardoor werd hij Eesan genoemd. Eesan betekent god.

Ravanan è un re che ha regnato lo Sri Lanka nel passato. Ravanan era un uomo forte e coraggioso. Era considerato un buon regnante. Era un bravo danzatore e musicista. Il simbolo sulla bandiera di Ravanan è un Veenai. Lui dimostrava amore materno verso il suo popolo. Era considerato un regnante dall'animo buono e quindi veniva paragonato a dio. Per questo motivo veniva soprannominato Eesan. Eesan significa dio.

Iravanan var en tamilsk konge som regjerte Ilankai i gamle dager. Iravanan var sterk og var en god konge. Han var veldig flink i musikk og dans. Som symbol på flagget brukte han veena. Han viste kjærlighet til alle borgere. Ettersom alle følte at han var god, hyllet de ham som en gud. Derfor ble han kalt Eesan. Eesan betyr gud.

En kung som regerade över Sri Lanka förr i tiden var Iraavanan. Iraavanan var en stor hjälte. Han var en bra kung. Var duktig inom musik- och danskonsten. Iraavanans flagga är veena-flaggan. Han visade kärlek till alla personer som en mor gör. Eftersom han var god mot allihopa prisade man honom som gud. Därför kallades han för "Eesan". "Eesan" betyder gud.

புள்ளிகள் 05

**கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் புலப்பெயர்வு
- மானம் என்ற அதிகாரத்தில் மானத்தின் சிறப்பு, மானம் இழந்தால் ஏற்படும் இழிவு, மானமுடையோரின் உயர்வு பற்றி வள்ளுவர் கூறியவற்றைத் தொகுத்துத் தருக.
- தமிழர் பண்பாடும் வாழிடப்பண்பாடும்

புள்ளிகள் 20